# போர்வாள்


ிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
ா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

ள்
2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆனி 4
18—6—49 சனிக்கிழமை


வீச்சு
42


**இதற்கென்ன செய்வது?**

கடவுள் தங்களுக்கு நன்மை செய்ததற்காக கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று சிலர் சொல்வதானால், கடவுள், பலருக்குத் தீமை செய்ததற்காகத் தீமையை அநுபவிப்பவர்கள் கடவுளை என்ன செய்யவேண்டும்?

—பெரியார்

## பகுத்தறிவு வளர்ச்சிக்கு 144!




தென்னாட்டு மக்களுக்குப் பகுத்தறிவு உணவைத் தந்துவரும் விடுதலை, ாவிட நாடு ஆகிய இதழ்கள் முறையே ரூ. 10,000 மும் ரூ. 3000 மும் ஜாமீனை கட்டினால்தான் அவற்றைத் தொடர்ந்து நடத்தலாம் என்று ஆணை பிறப்பித்திருக் றனர் ஆட்சியாளர்கள்.

**அடக்க அடக்க ஓங்கிஎழும் அற்புதசக்தி திராவிடர் கழகம்!**

# இது நிஜமா?

"சுயராஜ்ய சர்க்காருக்கும் அந்நிய சர்க்காருக்கும் உள்ள வித்தியாசத்தை யார் முதலில் உணர வேண்டுமோ அவர்கள் இன்னும் உணராமலிருப்பது தான் ஆச்சரியமாக இருக்கிறது. ஜனங்களைப் பொறுத்தவரை இந்த வித்தியாசத்தை முன்பே உணர்ந்து விட்டார்கள். சர்க்கார்தான் இன்னும் உணரவில்லை என்பதற்கு 'விடுதலை'ப் பத்திரிகைக்கு ரூ. 10,000 ஜாமீன் கேட்டிருக்கும் உத்தரவே ஒரு உதாரணமாகும்."

"இந்த உத்தாவுக்கு யார் காரணமோ அந்த பிரகஸ்பதிகள் பிரிட்டிஷாரையும் பல படிகள் மீறிப் போய்விட்டார்களென்பது இதில் இன்னொரு ஆச்சரியம். ஏனென்றால் தமிழ் நாட்டின் பத்திரிகை உலக சரித்திரத்திலேயே இதுவரை எந்தப் பத்திரிகைக்கும் இவ்வளவு அதிகமான ஜாமீன் தொகை கேட்டதில்லை. சரித்திரமே கண்டிராத இந்த சாதனையைத் தான் இப்பொழுது நம் சுயராஜ்ய சர்க்கார் சாதித்திருக்கிறார்கள்".

"ஏற்கனவே இப்பத்திரிகை கட்டியிருந்த ரூ. 2000 ஜாமீன் வேறு பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பறிமுதலே ஒருதண்டனையாகும். அதாவது பத்திரிகையின் போக்கு தவறானது என்பதைக் காட்டத்தான் இந்தப் பறிமுதல் ஆகியிருக்கிறது. இந்தக் காரியத்தை செய்த சர்க்கார் இன்னொரு தண்டனை விதிப்பதற்கு முன்னால் சற்று பொறுத்திருந்து பார்த்திருக்கலாம். இப்பறிமுதலுக்குப் பிறகும் அப்பத்திரிகை தன் போக்கை மாற்றுகிறதா என்று பார்த்திருக்க வேண்டும். அல்லது பறிமுதல் செய்த தொகை மாதிரி இன்னொரு ரூ. 2000 ஜாமீன் கேட்டிருக்கலாம். இப்படி ஏதாவது ஒன்றைச்செய்வதுதான் சர்க்காருக்கும் அழகு, பாதிக்கப்பட்ட பத்திரிகைக்கும் நியாயம் வழங்கியதாகும். ஆனால் சர்க்காரோ தலை போகிற அவசரத்தில் ரூ. 10,000 கொண்டா என்று கழுத்தில் துண்டைப் போட்டு இழுத்திருக்கிறார்கள். இந்தக் கெடுபிடியில் பொறுப்புணர்ச்சி இருப்பதாகவே தெரியவில்லை. ஏனென்றால் அதிகாரத்தில் உள்ளவர்கள்தான் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு முன்னால் தயங்க வேண்டும். துஷ்ப்பிரயோகம் ஆகிவிடக்கூடாதே என்று பயப்படவேண்டும். சென்னை சர்க்கார் உத்தரவில் இந்தத் தயக்கமோ பயமோ இருப்பதாகத் தெரியவில்லை. தங்கள் அதிகாரம் எது வேண்டுமானாலும் செய்யுமென்ற எண்ணம்தான் இதில் தெரிகிறது."

"எந்தக் கட்சிப் பத்திரிகையாக இருந்தாலும் சரி, அதன் இடுப்பை ஒடிக்கும்படியான காரியத்தை இஷ்டம் போல செய்வது என்பது ஜனநாயகத்தையே குழி தோண்டிப் புதைப்பதாகும். 'விடுதலை' இழைத்திருக்கும் தவறு பத்திரிகை உலகத்துக்குப் புதிதல்ல. 'விடுதலை' விஷயத்தில் எந்த வகுப்புவாத உணர்ச்சி குற்றமாகக் கருதப்படுகிறதோ, அதே குற்றத்தைப் பிற பத்திரிகைகளும் செய்திருக்கின்றன. இல்லா விட்டால் "டுவிடல்டீ அன்ட் டுவிடல்டாம்" என்றோ "கிழவனும் கழுதையும்' என்பதாகவோ தலையங்கங்கள் வந்திருக்குமா? அல்லது இத் தலையங்கங்களுக்கு வகுப்பு வாத உணர்ச்சி காரணமல்ல என்றுதான் சொல்ல முடியுமா? ஏனவே 'விடுதலை' மீது மட்டும் நடவடிக்கை எடுக்கும் சர்க்கார் இதே குற்றத்தைச்
செய்யும் மற்றவர்கள் விஷயத்
தில் என்ன செய்யப்போகிறா
கள் என்பது தெரியவில்லை."

"விடுதலை'ப் பத்திரிகை
இழைத்த தவறு இமயமளவு
இருந்தாலும்கூட கோர்ட்டுக்
குப் போவதுதான் ஜனநாயக
தர்மம். கோர்ட்டில் பத்திரி
கையை நிறுத்தி வைத்து குற்
றம் சாட்டலாம். அவசியமா
னால் அதிக தண்டனை வழங்கும்
படி கோரலாம். கோர்ட்டாரே
குற்றமென்று கருதினா
ரூ. 10,000 அல்ல எது வேண்
மானாலும் செய்துகொண்டு போ
கட்டும். ஆட்சேபனையே இல்
இப்படித்தான் ஜனநாய
நாடுகளில் எல்லாம் நடக்கிறது
சமீபத்தில் பம்பாயில் கூட
ஓரிரு பத்திரிகைகள் விஷயத்தி
இப்படித்தான் நடந்தது. ஆனா
சென்னை சர்க்காரோ இவை
எல்லாம் உணர்ந்திருப்பதாக
தெரியவில்லை".

"இவர்கள் செய்கைக்கு ஏதா
வது உதாரணம் காணவேண்டு
மென்றால் பாகிஸ்தானில் நடந்
ஒரு சம்பவத்தைத்தான்
சொல்ல வேண்டும். ஒரு டில்
செய்தியைப் பிரசுரித்ததற்கா
"ஸிவில் அன்ட் மிலிட்ட
கெஜட்" என்னும் பத்திரிகை
பாகிஸ்தானிகள் இப்படித்தா
கோர்ட்டுக்குப் போகாமல் இ
மாதங்களுக்கு இழுத்து மூட
சொன்னார்கள். ஒரு பத்தி
கையை சில மாதங்களுக்
மூடச் சொல்லுவதும் அ
ஒரே அடியாக அடக்குமு
எக்ஸ்பிரஸில் எமலோகத்து
பார்ஸல் செய்வதும் ஒன்
தான். சென்னை சர்க்கா
இப்பொழுது பாகிஸ்தானி
தான் இப்படி காப்பி அடி
திருக்கிறார்கள். அப்படியானா
சென்னை சர்க்காரில் பாகி
பாகிஸ்தானிகள் கள்ளத்த
மாகப் புகுந்து வேலை செ

(12-ம் பக்கம் பார்க்க)

# ஏன்? எப்படி? எதற்காக?

★

## கேள்வியும் விடையும்

★

[ இளஞ்செழியன் ]

1. தமிழன் தொடுத்த போர் என்ற பெயரில் தாங்கள் தீட்டியுள்ள புத்தகத்தில் சென்ற இந்தி எதிர்ப்புப் போரில் சிறைபுகுந்த தாய்மார்கள் அனைவர்பெயரையும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் ஆதித்திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த தோழியர் சௌந்தரி அம்மையார் பெயரை மட்டும் மறைத்துவிட்டிருக்கிறீர்கள். இது, ஆதித்திராவிட சமுதாயத்திற்குத் தாங்கள் செய்துள்ள மகத்தான துரோகம் அல்லவா?

"தமிழன் தொடுத்த போர்," ஒரு பெரிய வரலாற்றைச் சித்தரித்துக் காட்டும் சுவடி. சம்பிரதாயத்திற்கு அல்ல, உண்மையாகவே கூறுகிறேன், அத்தகைய பெரிய வரலாற்றை என்னைப்போன்ற இளம் எழுத்தாளர் ஒருவர் எழுதி இருக்கக்கூடாது. அனுபவமும் ஆற்றலும் மிகுந்த பேரறிஞர்கள் யாரேனும் எழுதி இருக்கவேண்டும். அதுதான் முறை. ஆனால் அத்தகைய அறிஞர்கள் யாரும் இந்த வரலாற்றை எழுத முன்வராததால், நான், சிறந்த முறையில் அல்ல—என்னால் இயன்ற முறையில், நானேதான் இந்தப் புத்தகத்தை எழுதியாகவேண்டும் என்ற எண்ணத்தின்மீதல்ல-- கடமையை யாராவது ஆற்றவேண்டுமே என்ற கருத்தின்மீது, இந்த வரலாற்றைத் தீட்டியிருக்கிறேன். தீட்டியபோது சிற்சில பிழைகள் நேர்ந்திருக்கக்கூடும். இது இயற்கை. மகத்தானதோர் வரலாற்றைச் சித்தரித்துக்காட்டும் ஒரு பெரிய புத்தகத்தில் இரண்டொரு பிழைகள்கூட இல்லாமல் இருக்கும் என்றுயாரும் எதிர்பார்க்க முடியாது. நான் மனிதன்—"எல்லாம்வல்ல இறைவன்" அல்ல! "எல்லாம் வல்ல இறைவனே" கூட இந்த உலகத்தைப் படைத்ததிலே எண்ணற்ற பிழைகளைச் செய்துதான் இருக்கிறார்! எனவே நான்—ஒரு சாதாரண மனிதன்—அதுவும் இளைஞன், ஒரு புத்தகத்தைப் படைக்கும் முயற்சியில் தவறே இழைத்திருக்கக் கூடாது என்று யார் கூறமுடியும்? இந்த வகையில், "தமிழன் தொடுத்த போர்" என்னும் புத்தகத்தில் காணப்படும் சிற்சில தவறுகளில் ஒன்றுதான் தோழியர் சௌந்தரி அம்மையார் பெயர் விடுபட்டுப் போய் இருப்பது! தவறு தவறுதான்! ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒன்று! சிறை புகுந்த தாய்மார்கள் அனைவர் பெயரையும் குறித்திருக்கிறேன்— திருவாட்டி சௌந்தரி அம்மையார் பெயரை மட்டும்தான் குறிப்பிடவில்லை என்று கூறுகிறீரே, இது முழுத் தவறு! திருவாட்டி சௌந்தரியார் பெயர் விடுபட்டுப்போய் இருப்பது போலவேதான் வேறு நான்கைந்து வீராங்கனைகளின் பெயர்களும் விடுபட்டுப்போய் இருக்கின்றன. விடுபட்டுப் போனதின் காரணம், அவர்களின் பெயர்களை மறைத்துவிடவேண்டும் என்னும் தவறான எண்ணம் அல்ல; புத்தகம் எழுதிய நேரத்தில், அவர்களின் பெயர்கள், எவ்வளவோ ஆதாரங்களைத் துருவிப் பார்த்தும் எனக்குக் கிடைக்காததுதான். இப்போது, உம்முடைய கேள்வியின் மூலமாகவும், ஒரு சகோதரப் பத்திரிகையில் இது பற்றி எழுதப்பட்டிருந்த ஒரு "தாக்குதல் குறிப்பு" மூலமாகவும், தோழியர் சௌந்தரியார் பெயர் மட்டும் எனக்குத் தெரியவந்திருக்கிறது. இன்னமும் விடுபட்டுப் போன மற்ற தாய்மார்களின் பெயர்கள் எனக்குத்தெரியவில்லை. தெரிந்தவர்கள் அப் பெயர்களை எனக்கு அனுப்பிவைத்தால் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன். தோழியர் சௌந்தரி அம்மைய
டுப் போ
யதற்காகத்
நன்றி. ஆனால்
இந்தப் பெயரை,
வேண்டுமென்றே
டது போலவும், அப்படி
விட்டதற்குக் காரணம் இந்த
மையார் ஆதித்திராவிட சமுதாய
தவராக இருப்பதுதான் என்பது போலவும் நீவிர் எழுதி இருக்கின்றீரே, இதனை எண்ணும்போது தான் எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வருகிறது. புத்தகம் எழுதிய நேரத்தில், சிறை புகுந்தவர்களில் ஒருவர் இந்த அம்மையார் என்பதே எனக்குத் தெரியாது. இவர்கள் ஆதித்திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதோ நீர் கூறித்தான் எனக்குத்தெரியும். இந்நிலையில் வேண்டுமென்றே பெயரை மறைக்கும் பிரச்சினை எப்படித்தான் எழமுடியும்? மேலும் ஆதித்திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காகத்தான், அம்மையார் பெயரைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டேன் என்பது உண்மையானால் இந்திப் போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்த ஆதித்திராவிடர்கள் யார் பெயருமே புத்தகத்தில் இருக்காது அல்லவா? ஆனால் இப்போது அப்படி இல்லாமலா இருக்கிறது? ஆதித்திராவிட மரபில் உதித்தவரும், தமிழ் வாழ, தன் வாழ்வை அர்ப்பணித்தவருமான அந்த மாவீரர் நடராசனார் படமல்லவா, எடுத்த எடுப்பிலேயே, புத்தகத்தைத் திறந்தவுடனே ஆர்ட் தாளில், அழகுறப் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது? இதைப் பார்த்துவிட்டுமா நான் ஆதித்திராவிட சமுதாயத்திற்குத் துரோகம் செய்துவிட்டேன் என்று எழுதுவது? நியாயமா இது? ஜாதி பேதங்கள் என்னும் சமுதாயவளர்ச்சித் தடைக்கற்கள் அவ்வளவையும் இடித்துத் தகர்த்துத் தூளாக்கிவிட்டு, எல்லாரும் ஓர் குலம் என்ற அடிப்படையில் புதியதோர் உலகு அமைக்கவேண்டும் என்று அரும்பாடுபட்டுவரும் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவனல்லவா நான்? என்னைப் பார்த்தா இப்படிக் கேட்பது? கேட்கலாமா இதுபோல? சிந்தித்துப் பாரும். ஒரு கணம் சிந்தித்தாலும் போதும், நீர் இந்தக் கேள்வியை இந்தப் பாணியில் கேட்டது எவ்

[10-ம் பக்கம் பார்க்க]

# [illegible]—ஒரு பாடம்!

[illegible]ம்! அந்த நகரத் [illegible] அகில இந்தியாவின் [illegible]ம் சுழன்று கொண் [illegible]ந்தது இந்த ஒரு மாத காலமாக! பத்திரிகைகளிலே கல்கத்தாவைப் பற்றிய காரசாரமான கருத்துரைகள்! மேடைகளிலே கல்கத்தாவின் முடிவு என்னாகுமோ என்பது பற்றிய ருசிகரமான விவாதங்கள்! தலைவர்கள் உள்ளத்தில் கல்கத்தா நாட்டிற்கு என்ன தீர்ப்பை அளிக்குமோ என்பது பற்றிய ஓயாத சிந்தனை! பஸ்களிலேயும் டிராம்களிலேயும் கடற்கரையிலேயும் அரசியல் நிலைமையைக் கூர்ந்து கவனிப்பவர்கள் சந்திக்கும் போதெல்லாம் கல்கத்தாவைப் பற்றிய கருத்துக்களின் பரிமாறல்! பல்வேறு கட்சிகளில் பாசமும் நேசமும் விஸ்வாசமும் படைத்தோர் உள்ளத்திலெல்லாம் "கல்கத்தா பஜனை!" காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம் சிறந்து பொலிய வேண்டும் என்ற ஆசை கொண்டவர்கள் முகத்திலெல்லாம் கல்கத்தாவைப்பற்றிய ஒரு கேள்விக்குறி! அதுபோலவே, காங்கிரசின் போக்கு நாட்டு நலத்திற்குக் கேடு சூழும் தன்மையது என்று கருதுவோர்தம் பேச்சிலெல்லாம் கல்கத்தா குண்டு வெடித்தால் உள்ளிருந்து வெளிவருவது என்னவாக இருக்குமோ என்ற ஐயவினா! இவ்வண்ணம், கல்கத்தா, இந்தப் பரந்த இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் தன்னைப் பற்றியே சிந்தனை சுழன்று கொண்டிருக்கும்படி செய்துவிட்டதற்குரிய காரணம், ஜூன் 12 அன்று அங்கே நடைபெற்ற சட்டசபை உபதேர்தல்! இந்த உபதேர்தல்ல் காங்கிரஸ் கட்சியின் சார்பில் சுரேஷ் சந்திரதாஸ் என்பவரும், காங்கிரசை எதிர்த்து நேதாஜி என்று புகழ்படைத்த சுபாஷ்சந்திரபோஸ் அவர்களின் தமையனார் சரத் சந்திரபோசும் போட்டி யிட்டனர். தேர்தலில் போட்டி மிக மும்முரமாக இருந்தது. காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற வேண்டுமென்று இயல்பாகவே எல்லா காங்கிரஸ்காரர்களும் இரவும் பகலும் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தனர். காங்கிரஸ்காரரை எதிர்த்து நிற்கும் சரத் சந்திரர் வெற்றிபெற வேண்டுமென்று நாட்டில் உள்ள முற்போக்குச் சக்திகள் அவ்வளவும் ஆசைப்பட்டன. காங்கிரஸ் கட்சிக்கு நாட்டு மக்களிடத்திலே முன் போல செல்வாக்கு இருக்கிறதா அல்லது செல்லாக் காசாகிவிட்டதா காங்கிரஸ் கட்சி என்பதைத் தெரிந்துகொள்வதற்கான ஓர் உரைகல் என்றே இந்தத் தேர்தலை காங்கிரஸ்காரர்களும், அதுபோலவே மாற்றுக் கட்சியினரும் கருதலாயினர். இந்தத் தேர்தலில் காங்கிரஸ் தோற்றுவிட்டால் எதிர்காலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு நாட்டுப் பொதுவாழ்வில் இடமில்லை என்பது நிச்சயமாகிவிடும் என்று பொதுவாக இந்தியா முழுவதும் பலரும் நினைத்தனர். ஒரே வார்த்தையில் சொல்வதானால் காங்கிரஸ் கட்சி இனி இருக்குமா அன்றி இறக்குமா என்பதற்கான அரசியல் ஆருடமாகக் கொள்ளப்பட்டது கல்கத்தா உபதேர்தல்! எனவேதான் அந்தத் தேர்தலைக் குறித்து இந்தியா முழுவதும் இவ்வளவு பரபரப்பு ஏற்படவும், அதைப்பற்றியே அனைவரும் பேசவும் சிந்திக்கவுமான நிலைமை நேரிட்டது.

ஜூன் 12ல் தேர்தல் முடிந்துவிட்டது. ஜூன் 14ல் தேர்தலின் முடிவும் தெரிவிக்கப்பட்டுவிட்டது. அந்த முடிவின்படி காங்கிரஸ் அபேட்சகர் பெற்றிருக்கும் ஓட்டுகள் 5780. அவரை எதிர்த்து நின்ற சரத்சந்திரர் பெற்ற ஓட்டுகள் 19,030. காங்கிரஸ்காரர்களுக்கு மிகவும் பிரியமான அவர்களுடைய சொந்தத் தமிழ் நடையிலே புகல்வதானால், இந்தத் தேர்தல் மூலம் காங்கிரஸ் கட்சிக்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். நம்முடைய சாதாரணத் தமிழ் நடையிலே இயம்புவதானால், காங்கிரசின் எதிர்காலம் இருண்டுவிட்டது என்பதற்கு இத்தேர்தல் நல்லதோர் எடுத்துக்காட்டு என்போம் நாம்.

காங்கிரஸ் நாட்டுமக்களிடம்பெற்றிருந்த நன்மதிப்பை இழந்து நெடுநாட்களாகிவிட்டன என்று நாம் பலமுறை கூறியிருக்கிறோம். நாம் கூறிவந்தது எவ்வளவு உண்மை என்பதை, இந்தக் கல்கத்தா தேர்தல், குன்றின்மீதிட்ட விளக்குப் போல தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டுகிறது.

இந்தத் தேர்தலில், காங்கிரஸ், சரியான முறையில் பணியாற்றவில்லை எனவேதான் தோற்றுவிட்டது என்று எந்தக் காங்கிரஸ்காரரும் வாதாட முடியாது. ஏனெனில் காங்கிரஸ் கட்சியின் பிரசார பீரங்கிகள் ஓயாமல் முழங்கிக் கொண்டே இருந்தன இந்த ஒரு மாத காலமாக! சாதாரண பிரசார பீரங்கிகள் அலுப்புச் சலிப்பின்றி பணியாற்றி யிருக்கின்றன என்பது மட்டுமல்ல இங்கே கவனிக்கப்படவேண்டியது, காங்கிரஸ் கட்சியின் மாபெருந் தலைவர்கள் என்று போற்றப் படுகிறார்களே பண்டித நேருவும் சர்தார் படேலும், அவர்கள் இருவருமே நேரிடையாக இத் தேர்தலில் ஈடுபட்டுப் பணிபுரிந்துள்ளனர். இந்தியாவின் துரோகிகளுடன் கை கோத்துக் கொண்டிருக்கிறார் சரத் சந்திரர்—அவருக்கு ஓட் கொடுப்பது இந்தியாவுக்குத் துரோகம் செய்வதாகும் என்று பொருள்பட, பண்டிதர், கல்கத்தாவாசிகளுக்கு "ஸ்பெஷல் அறிக்கை" அனுப்பியும், சரத் சந்திரரைத் தாக்கி அடிக்கடி பேசியும், வெளிநாடுகளில் சரத்சந்திரர் பேசிடும் கருத்துக்கள் இந்தியாவின் தன்மானத்திற்கே இழுக்குத் தருவன என்று பாராளுமன்றத்திலேயே ஏசியும் தேர்தல்பணி புரிந்தார். சர்தார் வல்லபாய் படேலோ காங்கிரஸ் கட்சியின் பழைய தியாகங்களைக் காட்டி இந்தப் புதிய தேர்தலில் ஓட்டுகள் போடுங்கள் என்று வாக்காளர்களைக் கேட்டுக் கொண்டார். அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பட்டாபியும் சும்மா இருக்கவில்லை. அவர் காங்கிரஸ் அபேட்சகரை ஆதரித்துப் பல அறிக்கைகளைப் பிறப்பித்த வண்ணம் இருந்தார். அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் காளா வெங்கட்ராவோ விமானத்தில் பறந்து சென்று, கல்கத்தாவிலேயே பல நாட்கள் தங்கி தேர்தல் வேலைகளில் ஜரூராக ஈடுபட்டிருந்தார். இவ் வண்ணம் "பெரிய தலைகள்" அவ்வளவும் கல்கத்தா தேர்தலில் முனைந்துநின்று பணியாற்றி இருக்கின்றன. என்றாலும் காங்கிரஸ் தோல்விப்ப[illegible]

(11-ம் பக்கம் பார்க்க)

# வழுக்கிவிழுந்த தேசபக்தர்கள்!

"மந்திரி பதவியையும் செல்வாக்கையும் தவருன வழிகளில் பயன்படுத்தித் தகாச் செயல் புரிந்தவர்கள்.!"

"சோந்தக்காரர்களுக்குப் பட்டமும் பதவியும் வாங்கித்தர அதிகாரத்தை அடாத முறையில் உபயோகித்துத் தம் கைகளைக் கறையாக்கிக் கோண்டவர்கள்!"

"லஞ்சம் வாங்கிப் பிழைத்தவர்கள். ஊழல் மிகுந்த ஆட்சி நடத்தியவர்கள்."

"பிற்போக்கு வாதிகளாக நடந்தவர்கள். கடைந்தெடுத்த வகுப்புவாதிகளாகத் திகழ்ந்தவர்கள்"

இவ்வளவு பயங்கரமான குற்றங்கள் அடுக்கடுக்காகச் சுமத்தப்பட்டிருக்கின்றன. யார் மீது தெரியுமா? 15 ஆண்டுகளுக்கு முன்னர் நாடாண்டார்களே, மாபாவிகள் என்று மகாத்மாவின் தொண்டர்களால் தூற்றப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி அமைச்சர்கள், அவர்கள் மீதா? அல்ல. 10 ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை மாகாணத்தில் செங்கோல் ஓச்சிவந்தார்களே ஜனங்களின் நம்பிக்கையைப் பெருத எதேச்சாதிகாரிகள் என்று நம் அனைவராலும் ஏசப்பட்டுவந்த வெள்ளைக்கார அட்வைசர்கள், அவர்கள் மீதா? அல்ல, அவர்கள் மீதும் அல்ல! இரவென்றும் பகலென்றும் இன்றி, காலையென்றும் மாலையென்றும் இன்றி, இடம் பொருள் ஏவல் என்பதோ காலம் நேரம் வேளை என்பதோ இன்றி ஆத்திரம் கொண்ட தேசபக்தர்களாலே ஆவேசமாகத் தாக்கப்பட்டு வந்தார்களே முஸ்லிம் லீகர்கள், அவர்கள் அமைத்துள்ளார்களே தனித் தரணி பாகிஸ்தான், அந்தத் தரணியில் வாழும் அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளா இவை? இல்லை இல்லை. அவர்கள் மீதெல்லாம் அல்ல நண்பர்களே இந்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பது! சாட்சாத் காங்கிரஸ் மந்திரிகள் மீதேதான் இவ்வளவு குற்றச்சாட்டுகளும் அள்ளி வீசப்பட்டிருக்கின்றன!

"சரி சரி! புரிந்துவிட்டது விஷயம்! சூனுமானுக்கள் இந்தச் சுடுசொற்களை வீசியிருப்பார்கள் சுயராஜ்ய பக்தர்கள் மீது" என்பீர்கள்! இல்லை தோழர்களே, சுயமரியாதைக்காரர்கள் அல்ல இந்த வாசகங்களை உருவாக்கியவர்கள்! சுயமரியாதைக்காரர்கள் இல்லாவிட்டால் கம்யூனிஸ்டுகளின் விஷமப் பிரசாரத்தின் ஒரு பகுதியாக இருக்கும் இது—சுயமரியாதைக்காரர்களைப் போலத்தானே அவர்களும இப்போதெல்லாம் காங்கிரஸைத் தாக்குகிருர்கள்—எனவே அவர்கள் இல்லாவிட்டால் இவர்கள்தான் என்று கூறத்தோன்றும் உங்களுக்கு! சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேம் கம்யூனிஸ்டுகளுமல்ல இந்த உண்மைகளை உரைத்திருப்பவர்கள்! உங்கள் சிரமத்தைக் குறைப்பதற்காக முன் கூட்டியே கூறிவிடுகிறேம் சோஷலிஸ்டுகளின் பேனு முனையிலிருந்தோ, சரத்சந்திர போசின் வீரமுழக்கத்திலிருந்தோ உதிர்ந்தவாசகங்களும் அல்ல மேலே பொறிக்கப்பட்டிருப்பவை! அப்படியானல், அருமைக் காங்கிரஸ் அமைச்சர்கள் மீது இவ்வளவு அபாண்டமான பழிகளை அஞ்சாமல் அள்ளி வீசியிருக்கிருர்களே அவர்கள் யாராக இருக்கமுடியும் என்று கேட்கிறீர்களா? இயம்புகிறேம் கேண்மின், காங்கிரஸ் கனதனவான்கள் மீது இவ்வளவு காரமான குற்றப் பத்திரிகை வாசித்திருப்பவர்கள் வேறு சில காங்கிரஸ் கனதனவான்கள்! குற்றம் சாட்டுகிறவர்களும் பாரத புத்திரர்கள்தான்! குறறம் சாட்டப் பட்டவர்களும் பாரத புத்திரர்கள்தான்! எனவே கட்சி மாச்சரியத்தின் காரணமாக இப்படிக் கூறுகிருர்கள் என்று இயம்புதற்கில்லை. உண்மையைக் கூறுகிருர்கள் என்றுதான் புகல வேண்டும்.

காளேஸ்வரராவ், கரந்த், தென்னேட்டி விஸ்வநாதம், பிரகாசம் ஆகியவர்கள்தான் குற்றப் பத்திரிக்கை வாசித்திருக்கிற பேரறிவாளர்கள்! இவர்களில் பிரகாசம் காருவோ முன்னுளில் முதலமைச்சராக இருந்தவர்; ஆந்திரகேசரி! மற்றவர்களோ பொறுப்புள்ள ஆந்திரா காங்கிரஸ் தலைவர்கள். அதிலும் நண்பர் கரந்த் ஒரு மாஜி அமைச்சர்! தென்னேட்டி விஸ்வநாதமோ இப்போதுள்ள மந்திரிசபையில் கூட இடம் பெறக் கூடியவர் என்று சென்ற மாதத்தில் கூட எதிர் பார்க்கப்பட்டவர். எனவே குற்றம் சாட்டியிருப்பவர்கள் யாரோ விலாசம் தெரியாத பேர்வழிகள், அவர்கள் குறை கூறுவது பற்றி நமக்கு என்ன கவலை என்று பொதுவாழ்வில் அக்கறை படைத்த யாரும் கூறி மன அமைதி பெற்றுவிடமுடியாது. குற்றம் கூறுபவர்கள் அவ்வளவு பெரும் பொறுப்பு வாய்ந்த காங்கிரஸ் தலைவர்கள். எனவே தாங்கள் படிக்கும் குற்றப் பத்திரிகையில் உள்ள வாசகம் ஒவ்வொன்றையும் ஒரு முறைக்கு மும்முறை எண்ணிப் பார்த்து, எடை போட்டுப் பார்த்து, அளந்து பார்த்து, தட்டிப் பார்த்து, கெட்டியாக இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொண்டுதான் வீசியிருப்பார்கள். அது போலவே, குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக் கூண்டில் ஏறும் நிலை பெற்றிருப்பவர்களும் ஊர் பேர் தெரியாத கங்கிரஸ்காரர்கள் அல்ல, ஊராளும் அதிகாரிகளை எல்லாம் அடக்கி ஆளும் உரிமை பெற்றிருந்தவர்கள் — அமைச்சர்கள்! ஆம்! ஓமந்தூரார் மந்திரி சபையில் அலங்கார புருஷர்களாக வீற்றிருந்த அமைச்சர்களில் பலர் மீதுதான் லஞ்சம், அதிகாரத் துஷ்

(11-ம் பக்கம் பார்க்க)

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டால், அந்தந்த மொழிவழி மாகாணங்களின் (அல்லது கிளை நாடுகளின்) எல்லை இப்போது இருப்பதை விட அதிகமாக "வளர்ந்திருக்கும்." கன்னட மாகாணத்தை (அல்லது கிளை நாட்டைப்) பொறுத்தவரை, பம்பாய் மாகாணத்திலிருந்தும் ஒரு துண்டு அதற்குக் கிடைக்க வேண்டியிருக்கிறது. இப்படியாக, திராவிடநாட்டின் கிளை நாடுகள் காண்கும் தங்கள் வளர்ச்சியின் நியாயமான எல்லையை அடைந்தும் வருகிறதே ஓர் எல்லைக்கோடு, அதுதான் திராவிடநாட்டின் எல்லைக் கோடு.

# போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆனி 4
18—6—49 சனிக்கிழமை


## தணியாத பெரும் பசி!

"உஸ்! சத்தம் போடாதே! மெதுவாகப் பேசு! மன்னர் தூங்குகிறார்!"

"மன்னர் தூங்குகிறாரா! தூங்கட்டுமே! அதனால் என்ன?"

"அதனால் என்னவா? நம் பேச்சு அரவத்தால் அவர் விழித்துக்கொண்டுவிட்டால் நம் தலை போய்விடும். இது தெரியாதா உனக்கு?"

"அட பைத்தியக்காரா, இது கூடத் தெரியாத மண்டு என்று எண்ணிக்கொண்டாய் என்னை? எனக்கு இதுவும் தெரியும், இதற்கு மேலும் தெரியும், ஆனால் நான் சொல்கிறேன் கேள், நம் பேச்சு ஒலி கேட்டு விழித்துக்கொள்ளக் கூடிய அவ்வளவு லேசான தூக்கத்திலா இருக்கிறார் மன்னர்? அதோ பார் பாராளும் மன்னன் பட்டுமெத்தை மீது தூங்கும் பகு சொகுசை! எவ்வளவு ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார் பார் தரணி வேந்தர்! இடி இடித்தால் கூட எழுந்திருக்க மாட்டார் போலிருக்கிறது அவரைப் பார்த்தால்! அவரைப்போய், என் பேச்சொலி கேட்டு எழுந்துவிடுவார் என்று கூறுகிறாயே, உனக்கென்ன பைத்தியமா?"

"உனக்குத் தெரியாது மன்னர் சமாச்சாரம்! பார்த்தால் இன்றைக்கெல்லாம் தூங்குவார் என்றுதான் சொல்லத் தோன்றும் யாருக்கும்! ஆனால் திடீரென விழித்துக் கொள்வார், மறுபடியும் சட்டென்று படுத்துத் தூங்கிவிடுவார். அவர் போக்கே அலாதி!"

"அப்படியா! அது எனக்குத் தெரியாதே!"

"தெரியாததால்தான் அவ்வளவு அலட்சியமாகப் பேசினாய், மன்னராவது விழிப்பதாவது என்று என்னை ஏசினாய். அதிருக்கட்டும்! அதோ, அந்தக் கோடி அறையில் மன்னர் தூங்குகிறார் அல்லவா?"

"ஆமாம்!"

"அவர் தூங்குவது உனக்குத் தெரிகிறதல்லவா?"

"தெரிகிறது!"

"அவர் தூங்கும் அந்த இரத்தினக் கட்டிலுக்கு இரண்டு பக்கமும் இரண்டு கட்டில்கள் இருக்கின்றனவே தெரிகின்றதா?"

"இரண்டு பக்கத்திலும் இருக்கும் கட்டில்களைத்தானே சொல்கிறாய்? நன்றாகத் தெரிகிறது!"

"கொஞ்சம் கூர்ந்து கவனித்து அந்தக் கட்டில்கள்மேல் என்ன இருக்கின்றன என்று சொல் பார்க்கலாம்."

"நாலைந்து பூசனிக்காய்களை ஒன்றாக உருட்டி எடுத்துத் திரட்டி வைத்ததுபோல என்னமோ, பெரிசா, வெள்ளையா, உருண்டையா ஒவ்வொரு கட்டில் மேலும் ஒவ்வொன்று இருக்கிறது."

"இருக்கிறது சரிதான்! அது என்ன என்றல்லவா கேட்கிறேன் நான்?"

"தெரியவில்லையேடா! என்ன அது?"

"சோறு!"

"சோறா?"

"ஆமாண்டா ஆமாம்! சோறுதான்!"

"சோறுன்னா, நாம் சாப்பிடறமே அந்தச் சோறுன்னா சொல்றே?"

"பின்ன என்னா சொல்றேன்? அதே சோறுதான்!"

"ஆச்சரியமாக இருக்குதே! இரண்டு பக்கமும் இரண்டு கட்டிலைப்போட்டு, அந்தக் கட்டில்கள் மேலே, இரண்டு பெரிய சோற்று உருண்டையை வச்சிக்கிட்டா, மன்னர் தூங்குவார்?"

"வச்சிக்கிட்டா தூங்குவார் என்று என்னை ஏன் கேக்கிறே? அதோ தூங்குறாரே தெரியலையா உனக்கு?"

"ஆமாம்! ஏன் அப்படி வச்சிக்கிட்டு இருக்காரு?"

"அதுவா, அது ஒரு பெரிய வேடிக்கை! தூங்கிகிட்டே இருக்கிறார் அல்லவா, திடீரென எப்பொழுதாவது விழித்துக் கொள்வார், உடனே அவருக்குப் பசி பசியா எடுக்கும்! பசின்னா உங்க வீட்டுப் பசி எங்க வீட்டுப் பசி இல்லே! யானைப் பசி! அகோரப் பசி! எவ்வளவு சாப்பிட்டாலும் இன்னும் கொஞ்சம் கொண்டா கொண்டா என்று கேட்கும்! அந்த மாதிரிப் பசி! இராக்ஷசப் பசி! இப்படிப் பசித்தா ஒரு விநாடிகூட தாங்கமுடியாது அவராலே! அதுக்காகத்தான் பக்கத்திலேயே தயாராக வச்சிருக்கிறார் உருண்டை! சட்டுனு எடுத்து மடமடவென முழுங்குவார்! அப்பா அப்பா, அது ஒரு கூத்து!"

"ஆமாண்டா! அதுக்குக்கூட இரண்டு உருண்டை எதுக்குடா?"

"அடே! இதுகூடத் தெரியலையா உனக்கு? விழிச்சிக்கிறபோது, இந்தப் பக்கமா விழிச்சிக்கிட்டா இந்த உருண்டை! அந்தப் பக்கமா விழிச்சிக்கிட்டா அந்த உருண்டை! தூங்கி எழுந்துக்கிறபோது எந்தப் பக்கம் எழுந்திருக்கிறாரோ அந்தப் பக்கத்து உருண்டையைச் சாப்பிடுவார், சாப்பிட்டவுடனே பழையபடி தூங்கிடுவார்! இதைப் பார்த்துக்கிட்டே இருந்து, காலியான பக்கத்திலே, உடனே, மற்றொரு உருண்டையை அடுக்களையிலிருந்து கொண்டுவந்து வைக்கிறதுதான் என் வேலை, தெரிஞ்சுதா?"

**பிகார்ஹா!** அவன்தான் இந்த உரையாடலில் குறிப்பிடப்படும் மன்னன்! குஜ்ராத நாட்டின் வேந்தன்! 1458 ல் அந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தவன்! அவன் காலத்திலேதான், அரண்மனையில், இரவு வேளையில், மன்னன் சயன அறைக்கருகே, சயன அறைக் காவலனுக்கும், சயன அறை மர்மங்களை அறியாத ஏனைய பணியாட்களுக்குமிடையே, மேலே பொறிக்கப்பட்டிருப்பதைப் போன்ற உரையாடல் நடப்பது வழக்கம்.

**மன்னன் பிகார்ஹா**வின் பசி ஈடிணையற்றது! அகில உலகிலும் அவன் பசிக்கு ஒப்போ உவமையோ கூறத்தக்க பசி வே

கிடையாது! இரவிலே தூங்கப் போகும்போது "இருபது பேர்" சாப்பிடக்கூடிய அளவு உணவை மிக இலேசாக அள்ளி விழுங்கிவிடுவான்! காலையிலே தூங்கி எழுந்ததும், கால் படி தேன், ஒரு கிண்ணம் வெண்ணெய், 150 முதல்தரமான வாழைப்பழம், ஒரு குவளை தயிர் இவ்வளவும் அவனுக்கு, காலைச் சிற்றுண்டி! இரவிலே தூங்கப் போகும்போதும், காலையிலே உறங்கி விழித்தவுடனேயும், இவ்வளவு அதிகமான உணவுக் குவியலை சமாப்தி செய்கிறானே **பிகார்ஹா**, அதோடு அவன் பசி அடங்கி விடுமா? அதுதான் இல்லை! தூங்கிக்கொண்டே இருக்கும்போது, திடீரென விழித்துக்கொள்வான் பிகார்ஹா! அப்படி விழித்துக் கொள்ளும்போது வேறு அவனுக்கு அகோரப் பசி எடுக்கும். அந்தப் பசியைத் தீர்த்துக்கொள்வதற்காக, முன் ஏற்பாடாக, உறங்கத்தொடங்கு முன்னரே, 5 சேர் அரிசியைச் சமைக்கச் சொல்லி, அதை இரண்டு பெரிய உருண்டைகளாக்கி, தன் படுக்கைக்கு இருமருங்கிலும் அவற்றை வைத்துக் கொண்டு தூங்குவது அவன் வழக்கம்!

**பிகார்ஹா**, பசியே உருவாக வந்த பார்த்திபன்! வயிற்றுக் கவலையையே பெரிதாகக்கொண்ட வேந்தன்! நாடாளும் கலையைக் கற்றுத் தெளிவதைவிட, தன் வயிற்று நிலையாளும் கலையையே சிறந்ததாகக் கருதிப் போற்றிய மன்னர்மன்னன்! குஜராத் மக்களின் குறைகளைப் போக்குவதைப் பற்றி அவன் எடுத்துக்கொண்ட அக்கறையைவிட "இடும்பைகூர் தன் வயிற்றின்" குறைகளைப் போக்க அவன் எடுத்துக்கொண்ட முயற்சியே அதிகம்! பார்த்திபன் பிகார்ஹாவின் பசிப் படலம் குஜராத் வரலாற்றிலேயே சுவையானதோர் பகுதி! இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றை ஊடுருவிப் படிக்கும்வாய்ப்புப்பெற்றோர், வேந்தன் பிகார்ஹாவின் வேடிக்கையான வாழ்க்கை வரலாற்றை ரசிக்கத் தவறியதில்லை. பிகார்ஹா என்றால் தணியாத பெரும் பசி, என்று பொருள். தணியாத பெரும் பசி என்றால் பிகார்ஹா என்று அர்த்தம்.

**பிகார்ஹாக்**கள், 1458ல் மட்டும்தான் இருந்தார்கள் என்று கூறுதற்கில்லை. இப்போதும் இருக்கிறார்கள். அவர்கள் குஜராத்திய மண்டலத்தில் மட்டும்தான் இருக்க முடியும் என்பதில்லை. சென்னை மாகாணத்திலும் இருக்கமுடியும்—இருக்கிறார்கள்!

**பிகார்ஹா**வை நாம் வரலாற்றிலே படித்திருக்கிறோம் ஆனால் நேரில் கண்டோமில்லை. ஆனால் நேரில் காண்கிறோம் மற்றொரு பிகார்ஹாவை! அதுவும் நம் நாட்டில் காண்கிறோம், பெயர் மட்டும்தான் வேறு! தன்மை, குணம், பண்பு, அந்த பிகார்ஹாவுக்கு இருப்பது போலவேதான் இந்த பிகார்ஹாவுக்கும் இருக்கிறது!

**மாண்டுபோன பிகார்ஹா** தணியாத பெரும்பசி படைத்தவன்!

**இன்று வாழும் பிகார்ஹா**வும் அடக்கமுடியாத பசியால் துடிப்பவர்!

**மாண்டுபோன பிகார்ஹா**, நாட்டு மக்களின் வாழ்க்கையிலே இன்பம் தவழவேண்டுமே, சாந்தி நிலவ வேண்டுமே, சமாதானம் கோலோச்ச வேண்டுமே, திருப்தி இருக்கவேண்டுமே, நலமாக வாழ வேண்டுமே மக்கள் என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டதே கிடையாது. **இன்று வாழும் பிகார்ஹா**வும் அப்படித்தான் மக்கள் வாழ்க்கையில் இன்பம் எக்களிக்க வேண்டுமே என்பதைப்பற்றி எண்ணிப்பார்ப்பதோ, ஏற்ற செயல் புரிவதோ கிடையாது.

**மாண்டுபோன பிகார்ஹா**, தேன் தெள்ளியதாகக் கிடைத்ததா, கட்டித் தயிர் கனஜோராக இருக்கிறதா, செவ்வாழையா மலை வாழையா எது எத்தனை டஜன் வந்தது, வெண்ணெய் எந்த ஊரிலிருந்து வந்தால் எவ்வளவு அற்புதமாக இருக்கும், பாலையும் பழத்தையும் ஒன்றாக அருந்துவதா தனித் தனியாக அருந்துவதா என்ற இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தானேயன்றி எந்த ஊருக்கு ஆஸ்பத்திரி வேண்டும், எந்த ஊருக்குப் பள்ளிக்கூடம் வேண்டும், எந்த ஊரில் வரிவஜா செய்யவேண்டும், எந்தப் பகுதியில் விளைச்சல் குறைவு என்பன போன்ற நலத்துறை வழிகளில் நாட்டம் செலுத்தினானில்லை. **இன்று வாழும் பிகார்ஹா**வும் இப்படித்தான் மக்கள் நலனை மனதில் கொள்ள மறுத்து தன் அகோரப் பசியைத் தணித்துக்கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கக் காண்கிறோம்.

நாம் முதலிலேயே குறிப்பிட்டதைப்போல, இந்த இரு பிகார்ஹாக்களுக்கிடையே பெயர் ஒன்றைத் தவிர, தன்மையில், சிறிதும் வேறுபாடில்லை. பழையபிகார்ஹாதன்னை பிகார்ஹா என்றே அழைத்துக் கொண்டான்! ஆனால் இந்தப் புதிய பிகார்ஹா தன்னைப் பிகார்ஹா என்று அழைத்துக் கொள்வதில்லை, **சென்னை காங்கிரஸ் மந்திரி சபை** என்று சொல்லிக் கொள்வது வழக்கம்.

சென்னை காங்கிரஸ் மந்திரி சபைக்கு ஏற்பட்டுள்ள அடக்குமுறைப் பசிக்கு ஏதாவது ஒரு உவமானம் சொல்லவேண்டும் என்றால் பிகார்ஹா மன்னனின் அகோரப் பசியைத்தான் உவமானமாகச் சொல்லவேண்டும். அதுபோலவே குஜராத் மண்டலாதிபதி பிகார்ஹாவின் அதி அற்புதப் பசிக்கு ஈடு அல்லது இணையாக எதனையாவது காட்ட வேண்டுமானால் சென்னை மந்திரிசபையின் தணியாத பெரும் பசியைத்தான் காட்ட முடியும். உண்மையிலேயே இந்த இருபசிகளைத்தான் ஒன்றிற்கு ஒன்று உவமானமாகக் காட்டமுடியுமே தவிர, இந்த இரு பசிகளுக்கும் வேறு உவமை தேடுவது என்பது வீண் வேலை; வெட்டிப் பொழுதுபோக்கு; அர்த்தமற்ற செயல்! ஏனெனில் அப்படி ஓர் உவமை அகில உலகிலும் கிடையாது என்பது சிலைமேல் எழுத்துப்போன்ற உறுதி.

அடே அப்பா! இந்த சென்னை காங்கிரஸ் சர்க்காருக்குத்தான் எவ்வளவு அகோரப் பசி! இந்த அடக்குமுறைப் பசியின் தீவிரத்தையும் தணியாத தன்மையையும் எண்ணிப் பார்த்தால் நமக்கு மயக்கமே ஏற்பட்டுவிடும் போல் இருக்கிறது, பசி அவ்வளவு பிரமாண்டமானதாக இருக்கிறது!

சீர்திருத்தக் கருத்துக்களைச்செந்தமிழில் தோய்த்துத்தரும் "**போர்வாள்**" நாடகத்தை, நடத்தாதே இனி இந்நாட்டில் என்று முதலில் தடை உத்தரவு பிறப்பித்தார்கள்—பசி அதனால் அடங்கக் காணோம்!

**கருப்புச் சட்டைப் படை**, மக்களின் கண்ணீரைத் துடைக்கும் பணியாற்றுகிறதா-அடக்கு அதனை என்று கூவினார்கள்—பசி அதனால் அடங்கக் காணோம்!

இராமகாதையால் திராவிட சமுதாயத்திற்கு ஏற்பட்ட இழிவைத் துடைக்க எழுந்தது **இராவண காவியம்** என்னும் எழில்மிகு சுவடி! விதித்தோம் அந்தச் சுவடிக்கும்

144 என்றனர் சர்க்கார். அதனாலும் அவர்கள் பசி அடங்கக் காணோம்!

**இரணியன்** என்றோர் நாடகமா, புரட்சிக் கவிஞர் எழுத்தோவியமா ஆகாது அதுவும் இந்நாட்டிற்கு, ஒழித்தே தீருவோம் அதனை என்று ஓங்காரக் குரலாலே "வீரமுழக்கம்" புரிந்தார்கள். அதனாலும் பசி சிறிதும் அடங்கக் காணோம்!

நடிகவேள் ராதா நாடெங்கும் பவனி வந்து, **சர்வாதிகாரி** என்னும் நாடகத்தை நடத்தி சமுதாயப் புரட்சியை உண்டுபண்ணி வருகிறாரா, தள்ளு அந்த நாடகத்தை அடக்குமுறைப் பட்டியலில் என்று தாக்கீது பிறப்பித்தார்கள். பசி, அந்தத் தாக்கீதாலும் தணிந்தபாடில்லை!

"**மகாத்மாவின் தொண்டன்**" மக்களின் எக்காளத்துக் கிடையே வெற்றி முழக்கம் புரிகிறதா இனி நடக்கக்கூடாது அந்த நாடகமும் என்றார்கள். அந்த அடக்குமுறைப் பாணத்தாலும் சர்க்காரின் அகோரப்பசி ஒரு சிறிதும் அடங்கவில்லை.

**தூக்குமேடை** என்றோர் நாடகத்தை தோழர் கருணாநிதி சிறப்புற நடத்திவந்தார். அந்த அழகிய ஓவியத்தையும் எங்கள் ஆட்சியில் விட்டுவைக்க முடியாது என்று அதிகார டலத்தைக் காட்டி அறிவுக்குத் தடை உத்தரவு போட்டது சர்க்கார். அந்த உத்தரவாலும் பசி குறைந்தபாடில்லை.

"**விடுதலை**" தினசரி பகுத்தறிவுப் பட்டாளத்தை ஒன்று பத்து நூறாகப் பெருக்கிக் கொண்டு வருகிறதா கல்லறைக்கு அனுப்புவோம் அந்தக் கருப்புச்சட்டை ஏட்டினை என்று கூறிக்கொண்டே "எடு ரூபா 2000" என்ற அடக்குமுறை ஈட்டியை அதன் மீது பாய்ச்சினர். அந்த ஈட்டிப் பாய்ச்சலாலும் சர்க்காரின் பசி குறைந்ததாகத் தென்படவில்லை.

தலைவர் பெரியாரையும் தளபதி அண்ணாவையும் ஆசிரியர் குருசாமியையும், அவர்கள்தம் கூட்டுத் தோழர்கள் நூற்றுவரையும், அவர்கள், கமிட்டிக் கூட்டத்தில் கலந்தாலோசித்துக் கொண்டிருந்த நேரத்திலேயே சுற்றிவளைத்துக் கைது செய்து சிறைச்சாலையில் கிடந்து வதையுங்கள் என ஆணையிட்டனர். அந்த அடக்கு முறை ஆணையும் சர்க்காரின் பசியைத் தீர்க்கக் காணோம்.

அந்த ஊருக்கு 144, இந்தக் கூட்டத்திற்கு 144, அந்தப் பேச்சாளருக்கு 144, இந்தத்தலைவருக்கு 144 என்று இப்படி 144 உத்தரவுகளை கணக்கு வழக்கின்றி அள்ளி வீசினர். 144 வீச்சுகளும் பசியைக் குறைக்கும் ஆற்றல் வாய்ந்தனவாய் அமையக் காணோம்.

குடந்தைமா நகரில், தமிழ் வாழ்க, உரிமை வாழ்க என்று கூறி அமைதியாக ஊர்வலம் நடத்திய இளங்காளைகளைத் தடியால் அடித்தும், எலும்பை முறித்தும், குருதி வெள்ளத்தில் மிதக்கும் படியான கோரமைக் காட்சிக்கு உள்ளாக்கினர். இந்தக் காட்சியின் மாட்சியும் சாட்சியும் எத்தகைய அடக்குமுறைப் பசியையும் தணிக்கும் ஆற்றல் படைத்தனவே என்றபோதிலும், சென்னை சர்க்காரின் அகோரப்பசியை மட்டும் தணிக்க வல்லனவாயில்லை. பசி குறையவில்லை, மேலும் வளரலாயிற்று.

கிட்டத்தட்ட இரண்டாயிரம் தமிழர்களை, இந்தி ஏகாதிபத்தியத்தை முறியடித்தே தீருவோம் என்று முழக்கமிட்ட ஒரே காரணத்திற்காக வெஞ்சிறைக்குள் தள்ளி கடுங்காவல் தண்டனையை அனுபவிக்கச் செய்தனர். சர்க்காரின் பசி இதனாலும் குறையவில்லை.

இறுதியில் உடுமலைப்பேட்டையில் நம் தலைவர் பெரியாரைக் கைது செய்து, தள்ளாத வயதுடைய அத் தலைவர் பெருந்தகையை அங்கும் இங்கும் லாரியில் அலைக்கழித்து கொடுமை பல செய்தனர். என்றாலும் பசி சர்க்காருக்குச் சற்றேனும் தணியவில்லை.

வரிசை வரிசையாக இவ்வளவு அடக்குமுறைக் குண்டுகளை நம் மீது வீசியும்கூட தங்கள் பசி அடங்கப் பெறாத சென்னை சர்க்கார், இதுபோது, திராவிட சமுதாயத்தின் இரு கண்களென விளங்கும் "**திராவிடநாடு**" இதழின்மீதும், "**விடுதலை**" தினசரிமீதும் ஜாமீன் விஷப்புகையைப் பாய்ச்சத் தொடங்கியிருக்கின்றனர்.

"**திராவிடநாடு**", சர்க்காருக்கு ரூ. 3000 காணிக்கை அளிக்க வேண்டுமாம்!

"**விடுதலை**", ஆளவந்தார்களுக்கு ரூபா 10,000 அன்பளிப்புத் தர வேண்டுமாம்!

கேட்டுவிட்டார்கள் சர்க்கார்! நாம் கொடுத்துத்தான் தீரவேண்டும்! ரூபா 13,000மும் கட்டப்பட்டால்தான் இந்த இரு ஏடுகளும் நாட்டில் உலவமுடியும், இல்லையேல் இவை மாண்டு மறைந்துவிட வேண்டியதுதான் என்ற இக்கட்டான நிலைமையில் இந்த இரு ஏடுகளையும் கொண்டுவந்து நிறுத்திவிட்டார்கள் சென்னை சர்க்கார்! இவ்வளவு பெருந் தொகையை, ரூபா 13,000 ஐ, ஜாமீனாகக் கேட்டால், இந்தத் தொகையைக் கட்ட முடியாமல் இந்த ஏடுகள் நின்று போய்விடும்; இந்த இதழ்களின் இருப்பை முறிப்பதற்கு இதுதான் சரியான வழி என்று கருதியே தான் ஆளவந்தார்கள் இந்தப் பயங்கரமான உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறார்கள். ஆனால் ஆளவந்தார்களுக்கு நாம் அன்புடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறோம், திராவிட சமுதாயம் தன் இரு கண்களென விளங்கும் இந்த இரு ஏடுகளையும் காப்பாற்றத் தவறாது! தவறாது! தவறாது! விலைவாசிகள் விஷம்போல ஏறிக்கிடக்கும் இந் நாளில், அந்த ஆனைவிலை குதிரைவிலைகளைத் தடுக்க இந்த நாட்டு சர்க்கார்கள் தம் சுண்டு விரலையும் அசைக்காதிருக்கும் இந் நாளில், வாழ்க்கைச் செலவு கழுத்தை முறிக்கும் தன்மையில் பெருகிவிட்ட இந் நாளில், பாட்டாளித் திராவிடத்திற்கு ரூபா 13,000 மிகப் பெரிய தொகைதான்! ஐயமில்லை! அதனை வசூலிப்பது, அதுவும் பத்துப் பதினைந்து நாட்களுக்குள் வசூலிப்பது உண்மையில் கஷ்டமான காரியம்தான்—அதிலும் ஐயமில்லை! நாம் இவ்வளவு பெருந் தொகையை வசூலித்துக் கட்டுவது எவ்வளவு கடினமான காரியம் என்பதைத் தெள்ளத் தெளிய உணர்ந்துதான் சர்க்கார் இந்தத் தாக்கீதுகளைப் பிறப்பித்திருக்கிறார்கள்—அதிலும் நமக்குத் துளியும் ஐயமில்லை! திராவிடர் கழகத்தில் திரண்டு நிற்கும் மக்களோ ஜமீன்தாரர்கள் அல்ல, மிராஸ் மிட்டாக்கள் அல்ல, திவான்பகதூர் ராவ்பகதூர்களல்ல, வடபாதி மங்கலங்களோ காடிமுத்து—சுப்பராயன்களோ அல்ல, நினைத்தால் ஆயிரம் பத்தாயிரம் என்று கொடுக்கக்கூடிய சீமான்களும் சீமாட்டிகளும் அல்ல இங்கே இருப்பது! இங்கே, கழகக் கொடியின் கீழே திரண்டு நிற்பவர்கள் யாவரும் ஒன்று மத்தியதர வகுப்பு மக்களாய் இருப்பார்கள், அல்லது ஏழைப் பாட்டாளிகளாக இருப்பார்கள். மறைந்த மாவீரர் அழ

கர்சாமியின் மொழியிலே கூறுவதானால், திராவிடர் கழகம், செம்பு பித்தளை தகர டப்பாக்கள், அன்னக்காவடிகள், அன்றாடங் காய்ச்சிகள் ஆகியோரின் மன்றம். இத்தகைய மக்களிடமிருந்து ரூ 13,000 உருவாவதென்றால், 'அது, உண்மையில் மகத்தானதோர் பிரச்சினை என்றே கூறிவிடலாம். ஓட்டைச் சட்டிகள், உடைந்த பானைகள், பொத்தல் பித்தளைப் பாத்திரங்கள், கால் இழந்த மேஜைகளின் ஒடிந்துபோன டிராயர்கள், கிழிந்த சட்டைகள், பொத்தல் கோட்டுகள் இன்னோரன்ன இடங்களிலிருந்து காலணா காலணாவாகத்தான், நாலணா நாலணாவாகத்தான், அரை ரூபா ஒரு ரூபாவாகத்தான் இந்தப் பணம் முழுவதும் வந்தாக வேண்டும். நமக்கு நன்றாகத் தெரியும், இந்தப் 13000 ஜாமீன் தொகைக்கு தங்கள் பங்குக்குரிய கடமையைச் செலுத்துவதன் விளைவாக, திராவிடர் கழகத் தோழர்களில் எத்தனையோ பேர் ஒரு பகல் அல்லது இரு இரவு தங்கள் உணவை இழக்க நேரிடும். அத்தகு நிலையில்தான் கழகத் தோழர்களில் பலர் இருக்கின்றனர் என்றபோதிலுங்கூட, அவர்கள், எப்பாடு பட்டேனும், ஒரு நாளைக்கோ இரு நாளைக்கோ தங்கள் உணவை இழந்தேனும், இந்த ரூபா 13,000 ஐயும் உருவாக்கியே தீருவர். இது உறுதி. ஏனெனில் அவர்கள் மிக நன்றாக அறிவர், இந்த இரு ஏடுகளும் இல்லாமல் போய்விட்டால், அவர்களுக்கு எதிர்காலம் என்பதே இல்லாமல் போய்விடும் என்ற உண்மையை!

**"விடுதலை!" "திராவிடநாடு!"** இரண்டும் இரண்டு பத்திரிகைகள் அல்ல! வருங்காலத் திராவிடத்தைச் சித்தரிக்கும் சிந்தனைச் சிற்பிகள்! பாட்டாளி உலகத்தின் வன்மை சேர் எழுச்சிக் குரல்கள்! கிழக்கு வெளுத்துவிட்டது, புதிய தென்னாடு உருவாகிறது என்பதற்கான அடையாளச் சின்னங்கள்! வருங்காலப் புரட்சிக்கு மக்களைத் தயாராக்கும் சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் பட்டாளங்கள், தமிழர் மறுமலர்ச்சி சகாப்தம் தொடக்கமாகிவிட்டது என்பதை அறிவிக்கும் விடிவெள்ளிகள்! இவற்றை இழக்கவா திராவிட உலகம் சம்மதிக்கும்? இல்லை இல்லை! ஒருநாளும் இல்லை! தங்கள் உயிரைக் கொடுத்தேனும் தங்கள் உயிரினும் உயர்ந்த இந்த உன்னத உயிரோவியங்களைக் காப்பாற்றியே தீருவார்கள் திராவிடர்கள்.

**விடுதலை! திராவிடநாடு!** நமக்குக் கிடைத்துள்ள இரண்டு ஒப்பற்ற புரட்சிக் கருவிகள்! சோவியத் ரஷ்யாவுக்கு ஒரு "பிராவ்டா", ஒரு "இஸ்வெஸ்டியா", இருப்பதைப் போல தென்னாடு என்னும் பொன்னாட்டிற்குக் கிடைத்துள்ள கிடைத்தற்கரிய பொக்கிஷங்கள் இவை. இப் பொக்கிஷங்களிலிருந்துதான், திராவிடர், அறிவுச் செல்வங்களை அள்ளிக்கொள்கின்றனர் நாள்தோறும், கிழமைதோறும்! தொட்டனைத்தூறும் மணற்கேணி போல, அள்ள அள்ளக் குறையாத பொக்கிஷங்களாக இருந்துவருகின்றன இந்த இரு ஏடுகள். ஆளவந்தார்கள், நல்லாட்சி முறையை உணர்ந்தவர்களாக இருந்திருந்தால், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்னும் வள்ளுவர் செப் திருக்குறளை மருவற நன்குணர்ந்தவர்களாக இருந்திருந்தால், நாட்டிற்கான நல்ல திட்டங்கள் பலவற்றைத் தீட்டவேண்டும் என்ற ஆசை படைத்தவர்களாக இருந்திருந்தால், நிச்சயமாக இந்த இரு ஏடுகளிடம் வந்து ஆளும் முறையை அறிந்துகொண்டிருப்பர். ஆனால் அவர்களோ நாடாள்வதில் போதிய திறமையும் பக்குவமும் பயிற்சியும் பழக்கமும் அற்றவர்களாக இருக்கும் காரணத்தால் இந்த அறிவுக் கருவூலங்களுக்கு ஜாமீன் தடை போடுகின்றனர்—அங்கிருந்து அறிவுச் செல்வங்களை அள்ளிக்கொள்வதற்குப் பதிலாக! என்னே அவர்கள்தம் அறியாமை கலந்த ஆணவப் போக்கு!

**விடுதலை! திராவிடநாடு!** "விடுதலை"யை திராவிட சமுதாயத்தின் இருதயம் என்று சொன்னால் "திராவிடநாடு" இதழினை அந்த சமுதாயத்தின் மூளை என்று சொல்லலாம். விடுதலையை ஒரு சமதர்ம நாட்டின் ஒப்பற்ற முதலமைச்சர் என்று கூறினால் திராவிடநாடு இதழினை அந்த நாட்டின் இணையற்ற வெளிநாட்டமைச்சர் என்று கூறலாம். விடுதலையை வீரன் ஒருவனின் வாள் என்று கூறினால் திராவிட நாட்டினை அந்த வீரன் ஏந்தும் கேடயம் என்று கூறலாம். இந்த இரண்டிற்கும் இப்போது ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இந்த இரண்டிலே எதை இழந்தாலும் பிறகு தமிழர் வாழ்வு இருண்ட வானமாகிவிடும். ஆகவே இந்த இரண்டு தன்மான முரசுகளையும் ஆட்சியாளர்களின் ஜாமீன் உத்தரவு என்னும் கத்தி கீறிக் கிழித்துவிடா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டியது தமிழர் கடமை. அந்தக் கடமையை அவர்கள் குறைவறச் செய்து முடிப்பார்கள் என்பதில் நமக்கு முழு நம்பிக்கை உண்டு. அவர்களின் இருதயத்தின் மீதும் மூளையின்மீதும் ஆட்சியாளர்களால் இதுபோது பாய்ச்சப்படும் கூரிய ஈட்டிகளை முறித்துத் தள்ளாவிட்டால் அவர்களின் வாழ்க்கையே அஸ்தமித்துப் போய்விடும் என்பது அவர்களுக்கு நாம் சொல்லித் தெரியவேண்டிய சேதியா என்ன?

* * *

குஜராத் மன்னன் மிகார்ஷாவுக்கு, எவ்வளவு சாப்பிட்டாலும் பசி அடங்காது மேலும் மேலும் எழுந்ததைப்போல நமது காருண்யமுள்ள கனம் காங்கிரஸ் சர்க்காருக்கும் எவ்வளவோ அடக்குமுறை அம்புகளை எய்துங்கூட அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அகோரமான அடக்குமுறைப் பசி சிறிதும் தணியாமல் மீண்டும் மீண்டும் மதர்த்து எழுகிறது. இம்முறையேனும் அவர்கள் பசி தணியுமா? ரூ 13000 ஜாமீன் என்ற இந்தப் பிரம்மாண்டமான உணவு உருண்டையைச் சாப்பிட்ட பிறகாவது அவர்கள் பசி குறையுமா? குறைத்துக்கொள்வதுதான் ஆட்சியாளர்களுக்கு நல்லது. இல்லையானால், அவர்கள், அடக்குமுறை உணவை விழுங்கி விழுங்கி, உடல் பெருத்து, வலி ஏற்பட்டு, தேர்தல் டாக்டரிடம் "கையைக் காட்ட" வரும்போது, அவர், 'தோல்வி இஞ்செக்ஷனை' அவர்கள் உடலில் ஏற்றுவது உறுதி.

---

## பெருநகர் உயர்நிலைப் பள்ளி

காஞ்சிபுரத்திற்கும் வந்தவாசிக்கும் இடையில் உள்ள பெருநகர் கிராமத்தில் 20-6-49 முதல் உயர்நிலைப்பள்ளி ஒன்று தொடங்கப்படுகிறது. இந்த ஆண்டு முதல் வகுப்பு முதல் நாலாவது பாரம் வரை வகுப்புகள் தொடங்கப்படும்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வளவு பெரும் பிழை என்பது உமக்குத் தெளிவாகத் தெரிந்து விடும்.

**2. திராவிடக் கழகத்திற்கும் தமிழரசுக் கழகத்திற்கும் என்ன வேற்றுமை?**

திராவிடக் கழகத்தாரின் கொள்கைகள் என்னென்ன என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் தமிழரசுக் கழகத்தாரின் கொள்கைகள் என்னென்ன என்பது அந்தக் கழகத்தாருக்கே தெரியாது! இதுதான் வேற்றுமை!

**3. ஆரியச் சிலந்தியின் வலையிலிருந்து தமிழகத்தைக் காப்பாற்றுவதற்காக அரும்பாடுபட்டுவரும் நீங்கள், தமிழ் நாட்டுக் கோயில்களில் வடமொழி மந்திரங்கள் இசைக்கப்படுவதை எதிர்த்து ஏன் ஓர் அறப்போர் தொடுக்கக் கூடாது?**

அவசியம் செய்யப்படவேண்டிய வேலை. ஆனால் இதை நாங்கள் செய்யக்கூடாது, நல்ல தமிழ் உணர்ச்சியும் சீர்திருத்த ஆர்வமும் படைத்த சைவ—வைணவ இளைஞர்கள் இத்துறையில் இறங்கி நற்பணி ஆற்றவேண்டும். அதுதான் முறை. நாங்கள் இப் பணியை ஆற்றத் தொடங்கினால் ஆண்டவனை வழிபடுவதற்கு ஆலயங்களே தேவையில்லை என்று கூறும் உங்களுக்கு ஆலயங்களுக்குள்ளே என்ன வேலை என்று தர்மகாத்தாக்களும் பிறரும் கேட்க இடம் ஏற்படும். அல்லாமலும், நாங்கள் கோயிற் சிலைகளை அவமானப்படுத்தினோம் என்று கதை கட்டி விடுவதற்கும், எங்கள்மீது அநாவசியமாக துவேஷப் பிரசாரம் செய்வதற்கும், விஷமிகளுக்கு நாங்களே வாய்ப்புத் தந்ததாகவும் ஆகிவிடும். ஆனால் ஆலய வழிபாட்டில் நம்பிக்கை உடைய சிவநெறித் தமிழர்களோ வைணவ நெறித் தமிழர்களோ, வடமொழி மந்திரங்கள் கூடாது என முழக்கமிடத் தொடங்கினால் யாரும் எத்தகைய குறையும் கூற இடமிராது. கோரிக்கையும் விரைவில் நிறைவேறும். அப்படிச் செய்ய முன்வரும் அறப்போர் வீரர்களுக்கு எங்கள் ஆதரவும் துணையும் நிச்சயம் இருக்கும்.

**4. மத்திய சர்க்காரின் கீழிருக்கும் தந்தி, தபால், ரயில்வே முதலிய தொழில்களுக்குச் செல்பவர்கள் இந்தியைத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். படித்துக்கொண்டேயிருக்கும்பொழுது, ஒருவன், பிற்காலத்தில் இன்ன வேலைக்குத்தான் போவான் என்று சொல்ல முடியாது. எனவேதான், சர்க்கார், இந்தியை எல்லா மாணவர்களுக்கும் கட்டாயபாடமாக வைத்திருக்கிறது. இது எப்படித் தவறாகும்?**

மத்திய சர்க்காரின் நிர்வாகம் இப்போதும் முற்றிலும் ஆங்கிலத்தில்தான் நடைபெற்று வருகிறது. தந்தி தபால் ரயில்வே முதலிய மத்திய சர்க்கார் தொழில் துறைகளிலும் சரி, அரசியல் அமைப்பு மன்றம் முதலிய கழகங்களிலும் சரி, டில்லி சர்க்கார் அலுவலகத்திலும் சரி, மாகாண மத்திய சர்க்கார்களுக்கிடையே நடைபெறும் கடிதப் போக்குவரவிலும் சரி, இன்னமும் ஆங்கிலம்தான் தனியாட்சி செய்து வருகிறது. ஆங்கிலத்திற்கு இப்போது உள்ள இந்த செல்வாக்கு இன்னமும் 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு இருக்கத்தான் செய்யும். பண்டித நேரு, மௌலானா ஆசாத், அன்பர் ஆச்சாரியார் போன்ற பிரபல காங்கிரஸ் தலைவர்களும் அப்படித்தான் கருதுகின்றனர். பலமுறை அவர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்திப் பேசியும் இருக்கின்றனர். எனவே, எப்போதோ, இருபது ஆண்டுகளுக்குப் பிறகுதான், இந்தி, மத்திய சர்க்காரில் பலமும் செல்வாக்கும் பெற முடியும். அதுகூட உறுதி இல்லை, ஏனெனில் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு நாடாளவரும் கட்சியினர் காங்கிரஸ் கட்சியினராகவே இருப்பர் என்று திடமாகக் கூறுவதற்கில்லை. எனவே அப்போது வரும் சர்க்கார் இந்திப் பொதுமொழி தேவையில்லை—ஆங்கிலமே போதும் என்று கருதினாலும் கருதக் கூடும். இத்தகு நிலையில் இப்போதே, நம் மாணவர்கள் அனைவரும் கட்டாயமாக இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது எந்தவிதத்தில் நியாயமாகும்?

வாதத்திற்காக, இப்போதே, இந்தி, மத்திய சர்க்காரில் ஆதிக்கம் பெற்றுவிடும் என்று வைத்துக் கொண்டாலுங்கூட, சிலர்தான் மத்திய சர்க்கார் உத்தியோகங்களைப் பெறக்கூடும். அந்தச் சிலர் உத்தியோகப் பெறுவதற்குமுன் ஓராண்டு காலம் இந்தியைக் கற்றுத் தேர்ச்சி யடைந்து தகுதி பெற்றுக்கொண்டால் போதாதா? யாரோ சிலர் எப்போதோ ஒரு காலத்தில் ஏதோ சில உத்தியோகங்களை ஒருவேளை பெறமுடியும் என்பதற்காக இந்த மாகாணத்தில் உள்ள இலட்சக்கணக்கான மாணவர்கள் அனைவர்மீதும் இந்தியை பலாத்காரமாகத் திணிப்பது முறையா? தேவையா? அப்படித்தான் அவர்கள் 11 அல்லது 12 வயது உடையவர்களாக இருக்கும்போது ஒரு இரண்டாண்டு காலம் இந்தியை ஏனோ தானோ என்று படித்துவிடுவதாலேயே, கல்வித்துறையில் பிறகு இந்தியுடன் எவ்வித தொடர்பும் இல்லாமல் இருக்கும் அவர்களுக்கு, 25 அல்லது 26 வயதில், வேலைக்குப் போகும்போது எப்போதோ படித்த இந்த இந்தி மொழி அப்படியே மறந்துபோகாமல் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியுமா? எனவே எப்படிப் பார்த்தாலும், இளம் பிள்ளைகளுக்கு இந்தி மொழியைக் கட்டாய பாடமாகக் கற்பிப்பதில் பயனே இல்லை என்பது தெளிவு.

**5. திராவிட நாட்டின் எல்லைகள் யாவை?**

தமிழகம், ஆந்திரம், மலையாளம் கன்னடதேசம் ஆகிய இந்தநான்கு கிளைநாடுகளின் கூட்டு மொத்த எல்லையேதிராவிடநாட்டின் எல்லை. இந்தக் கிளைநாடுகளின் எல்லை "வளர வளர" திராவிட நாட்டின் எல்லையும் "வளரும்." இப்போது புதுக்கோட்டைத் தனியரசு தமிழகத்துடன் இணைந்துவிட்டதால் தமிழகத்தின் எல்லை "வளர்ந்திருக்கிறது." இதுபோலவே, தென்னாட்டில் உள்ள கொச்சி, திருவாங்கூர் மைசூர், ஐதராபாத் ஆகிய சமஸ்தானங்கள் மொழிவழியே பிரிக்கப்பட்டு அந்தந்த மொழிவழி மாகாணங்களுடன் (அல்லது கிளை நாடுகளுடன்) இணைக்கப்பட்டு வி

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே வீழ்ந்திருக்கிறது என்றால், காங்கிரஸ் பெற்றுள்ள தோல்வி மகத்தான தோல்வி என்பதை யார்தான் மறுப்பர்?

எதிர்க்கட்சி அபேட்சகர் ஏதோ அபாரமாக வேலை செய்துவிட்டார், ஆகவேதான் அவர் வெற்றி பெற்றுவிட்டார் என்று சொல்லி பாரத புத்திரர்கள் மன ஆறுதல் பெறுவதற்கும் இல்லை. எதிர்க்கட்சி அபேட்சகர், பாபம், தேர்தல் நடைபெறும்போது இந்தியாவிலேயே இல்லை! தொலைதூரத்தில், ஐரோப்பா கண்டத்தில், ஸ்விட்சர்லந்து நாட்டில், ஏதோ ஓர் ஆஸ்பத்திரியில் தன் உடல் நிலையை முன்னிட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்திருக்கிறார்! இன்னமும் அவர் இந்தியாவுக்கு வரவில்லை. எதிர்க்கட்சி அபேட்சகர் நிலை இப்படி! ஆனால் காங்கிரஸ் அபேட்சரோ கல்கத்தாவிலேயே இருந்து சுழன்று சுழன்று பணியாற்றி இருக்கிறார்! இந்த நிலையிலேதான் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. இப்படி நடைபெற்ற தேர்தலிலேதான் காங்கிரஸ் படுதோல்வி அடைந்திருக்கிறது.

"ஓட்டுகளில் சொற்ப வித்தியாசம்தான் இருக்கிறது! இது ஒரு பிரமாதமா! இந்த சொற்ப வித்தியாசத்தை வைத்துக்கொண்டு, காங்கிரஸ், செல்வாக்கை இழந்துவிட்டது என்று கூற முடியுமா?" என்று தேசபக்தர்கள் ததிங்கிணதோம் போடுவதற்கும் வழி இல்லை. வித்தியாசம் ஏராளம்! காங்கிரஸ் உறுப்பினர் பெற்றிருப்பது 5780. எதிர்க்கட்சியாளர் பெற்றிருப்பது 19,030!

மக்கள் உள்ளத்தில் காங்கிரஸ் முன்னர் பெற்றிருந்த மதிப்பு முழுவதையும் இழந்துவிட்டது என்னும் உண்மையைத்தான் கல்கத்தா தேர்தல், முரசு கொட்டித் தெரிவிக்கிறது. இந்த உண்மையை சந்தர்ப்பவாதம் என்னும் திரையைப் போட்டு எந்த தேசபக்த சிங்கமும் மறைத்துவிட முடியாது. எந்த தேசபக்த சிங்கமும் என்றால் நம் பத்திரிகைகளின் கழுத்தை நெறித்துவிடுவதன்மூலம் நம் உரிமை முழக்கத்தையே ஒழித்துவிட முடியும் என்று கனவு காணும் காமராஜரையும் சேர்த்துத்தான் சொல்கிறோம்.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

**பிரயோகம், சொந்தக்காரர்கட்கு ஆகாயமிச் சலுகை, வகுப்புவாதிகளாக நடந்துகொண்டது** முதலான மகத்தான குற்றங்களைச் சுமத்தியிருக்கிறார்கள் அவர்கள் வீற்றிருக்கும் அதே கட்சியைச் சேர்ந்த வேறுசில வீராதிவீரர்கள்!

குற்றச் சாட்டுகளை பிரகாசம் குழுவினர் வடநாட்டு மேலிடத்துக்கு அனுப்பி வைத்ததோடு திருப்தி அடைந்துவிடவில்லையாம்; அவற்றைப் புத்தக வடிவிலே அச்சிட்டு வட இந்தியர்களிடையே முக்கியமானவர்களுக்கு நேரில் வழங்கியும் இருக்கிறார்களாம்! எப்படி இருக்கிறது தேசபக்தர்களின் இலட்சணம்! மாஜி மந்திரிகள் சிலர் மீது வேறு சில மாஜி மந்திரிகள் புத்தக வடிவிலே குற்றப் பத்திரிகையை வாசிக்கிறார்கள்! செ! உத்தமர் காந்தியார் போற்றி வளர்த்த காங்கிரஸ் இவ்வளவுக்கா தாழ்ந்துபோய்விட்டது! என்ன கோராமை! எவ்வளவு அவமானகரமான நிலைமை! எத்தகு வெட்கக்கேடு!

அகில இந்திய காங்கிரசின் பொதுச் செயலாளர் சங்கர் ராவ் தேவ் டில்லியிலிருந்து இப்போது சென்னைக்கு வந்திருக்கிறார் இந்த ஊழல் குற்றங்களை விசாரித்துத் தீர்ப்பளிக்க! ஆனால் அவர் நடத்தும் விசாரணையில் பிரகாசம் குழுவினருக்கு, அவ்வளவாக நம்பிக்கையில்லையாம்! அவர்கள், ஐகோர்ட் நீதிபதி ஒருவரிடம் இந்த வழக்கு, விசாரணைக்கு விடப்பட்டால்தான், நியாயம் பிறக்கும், உண்மை துலங்கும் என்று பகிரங்கமாக அறிக்கையே வெளியிட்டுவிட்டார்கள்—அதுவும் சங்கர் ராவ் தேவ் விசாரணை செய்ய வந்திருக்கும் இந்த நேரமாகப் பார்த்து! காங்கிரஸ் காரர்களுக்கு அகில இந்திய காங்கிரஸ் செயலாளரிடமே நம்பிக்கையில்லை, அதை வெளிப்படையாகவும் கூறுகிறார்கள் என்றால் காங்கிரஸ் கட்சியின் உளுத்துப்போன நிலைமைக்கு இதைவிடச் சிறந்த சான்று வேறு என்ன வேண்டும்?

சங்கர் ராவ் தேவ் ஜுன் 12ல் சென்னைக்கு வந்தார். ஜுன் 19 முடிய அவர் சென்னையில் தங்கி விசாரணையை நடத்த இருக்கிறார். அவர் தனியாக இருந்து விசாரணையை நடத்தப் போவதுமில்லை. **பார்கவா** என்னும் ஒரு முக்கிய காங்கிரஸ்காரரையும் கூடவே துணைக்கு அழைத்துவந்திருக்கிறார். இருவருமாகத் தங்கி ஏழு நாட்கள் விசாரணையை நடத்தப்போகிறார்கள்! அதாவது ஏழு முழு நாட்கள் தேவைப்படுகின்றன பாரத புத்திரர்களின் வழக்கை விசாரிக்க! அப்படியானால் வழக்கு எவ்வளவு அதிகமான ஊழல்களை அம்பலப்படுத்துவதாக இருக்கவேண்டும்!

சங்கரர் சென்னைக்கு வந்தவுடனே பத்திரிகை நிருபர்கள் அவரைக் கண்டுகேட்டார்கள் நீங்கள் எதற்காகச் சென்னைக்கு வந்திருக்கிறீர்கள் என்று! உடனே சங்கர் ராவ் தேவ், நான் வந்திருப்பதற்குக் காரணம் தானே கேட்கிறீர்கள், அதுதான் அகில உலகத்திற்கும் தெரியுமே என்று அழகிய முறையில் சுருக்கமாக விடை அளித்துவிட்டு, பிறகு, நாம் இக்கட்டுரைத் துவக்கத்தில் கூறியிருக்கிறோமே குற்றச்சாட்டுகள், அவ்வளவையும் எடுத்துக்கூறி, இவ்வளவு குற்றங்களை சில மாஜிகள் மற்றும் சில மாஜிகள்மீது சுமத்தியிருக்கிறார்கள், இவற்றை விசாரிக்கத்தான் வந்திருக்கிறேன் என்பதாக அந்தச்சுருக்கமான விடைக்கு விளக்கவுரையும் பகர்ந்திருக்கிறார்.

தென்னாட்டுத் தேசபக்தர்களின் ஊழல் விவகாரத்தின் வாடை அகில உலகிலும் வீசுகிறது, என்றாலும் அவர்களுக்கு வெட்கம் பிறக்கக் காணோமே என்று நையாண்டி செய்யும் பாணியில் அமைந்திருக்கிறது சங்கரர் தந்த சுருக்கமான விடை. நமக்கோ நையாண்டி செய்யத் தோன்றவில்லை, வழுக்கி விழுந்த தேசபக்தர்களை எண்ணினால் பரிதாபம்தான் பிறக்கிறது! வழுக்கி விழுந்த தேசபக்தர்களை மட்டுமா, காங்கிரஸ் கட்சியை ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் கூட நம் உதடுகள் ஐயோ பாவம் என்று சொற்களைத்தான் நம்மை அறியாமலே முணுமுணுக்கச் செய்கின்றன. பெரியார் இராமசாமிகளும் திரு. வி. கலியாண சுந்தரனார்களும் வ. உ. சிதம்பரனார்களும் கொண்டா வெங்கட்டப்பய்யாக்களும் உலவிய தென்னாட்டுக் காங்கிரசில் இன்று வழுக்கி விழுந்த தேசபக்தர்கள்தான் நிரம்பி இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால், நாம் மட்டுமல்ல, காங்கிரசின் பழைய வரலாற்றையும் இன்றைய போக்கையும் ஒப்பிட்டுப் பார்க்கும் எவர்தான் வேதனைக் கண்ணீர் சிந்தாமலிருக்க முடியும்?

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு பெரிய உத்தரவை இவ்வளவு அனுவசியமாகப் போடுவதற்கு என்ன காரணம்? எனவே இவர்களை உடனே கண்டு பிடிக்காவிட்டால் மந்திரி சபையின் பெயருக்கே பெரிய களங்கம் ஏற்படும். அதோடு பத்திரிகை சுதந்திரம் என்பது வரும் போகும் மந்திரிமார்களின் விருப்பு வெறுப்புகளுக்கு உள்ளடங்கிய அற்ப விஷயமாகி விடும். 'விடுதலை'ப் பத்திரிகை மீது தொடுக்கப்பட்டிருக்கும் பாணம் இப்படிப் பட்டது தானோ என்று ராஜிய எதிரிகள்கூட நினைக்க விடக்கூடாது. அப்படிச் செய்வது தான் சுயராஜ்ய சர்க்காருக்கு அழகு. இதற்கு மாறாக பிரிட்டிஷார் காலத்து முறையைக் கையாண்டு வரும் பிரகஸ்பதிகள் யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு சுதந்திர சர்க்காரில் இடமளிப்பது தவறு. இம் மாதிரியான ஞான சூன்யங்கள் உழப்பி அடிப்பதுதான் காங்கிரஸுக்கும் சுயராஜ்ய சர்க்காருக்கும் கெட்ட பெயரை வாங்கித் தருகிறது. எனவே இந்த 10,000 ரூபாய் ஜாமீன் கெடுபிடி உத்தரவு புத்திசாலித்தனமானது தானா என்பதை சென்னை சர்க்கார் புனராலோசனை செய்ய வேண்டும்'.

* * *

"சார் தினசரி" என்று கூவிக்கொண்டே "தினசரி" பத்திரிகையை போர்வாள் அலுவலகத்தில் வீசிவிட்டுப் போனான் நமக்கு வழக்கமாகத் "தினசரி" பத்திரிகையைத் தந்துவரும் கடைக்காரப் பையன். நமது அருமை இதழ்களாகிய "விடுதலை"க்கும் "திராவிட நாட்"டிற்கும் ரூ 13000 ஜாமீன் கேட்டுவிட்டார்களே ஆளவந்தார்கள், இந்தப்பெருந்தொகையை நாம் எப்படியாவது சமாளித்துக் கட்டியாக வேண்டுமே, நம் கழகமோ ஏழைகளின் கட்சி, இந் நிலையில் இப்பணம் முழுவதும் எப்படி வசூலாகும், ஆனால் எப்படியாவது வசூலித்துத்தானே ஆகவேண்டும் என்ற கவலை தோய்ந்த சிந்தனையோடு நாம் வீற்றிருந்த நேரத்திலே தான் "தினசரி" நம் அலுவலகத்திற்கு வந்தது. ஆமாம், நமக்கு ஜாமீன் உத்தரவுகளை ஆட்சியாளர்கள் பிறப்பித்தால் இந்த கதர் சட்டை ஏடுகளுக்கு என்ன அதுபற்றிக் கவலையா என்ற மன எரிச்சலோடு தினசரி ஏட்டினைப் புரட்டத் தொடங்கினோம். முதல் பக்கத்தைத் தள்ளி, இரண்டாம் பக்கத்தைத் திறந்தவுடனே, தலையங்கப் பகுதியில் **ஜாமீன் கெடுபிடி** என்ற தலைப்பு இருக்கக் கண்டோம். உடனே, எங்கேயாவது பாகிஸ்தானில் காங்கிரஸ் பத்திரிகைகளுக்கு ஜாமீன் கேட்டிருப்பார்கள், அதைப்பற்றிக் கனல் கக்கும் நடையில் காரசாரமாகத் தீட்டியிருப்பார் ஆசிரியர் சொக்கலிங்கம் என்ற எண்ணம்தான் நமக்குப் பிறந்தது—எனவே வேண்டா வெறுப்புடன் தலையங்கத்தில் கண்களைச் செலுத்தினோம். இரண்டு மூன்று வரிகளைக்கூடப் படித்து முடிக்கவில்லை—தலையங்கம், நமக்கு ஜாமீன் கேட்டிருக்கும் சர்க்காருக்குச் சரியானதோர் சாட்டையடி என்பது தெரிந்தது. உடனே இது நிஜமா என்று தலையங்கத்தை மேலும் கீழும் பார்த்தோம். பத்திரிகையை அப்படியும் இப்படியும் புரட்டினோம். பையன், "தினசரி" என்று கூவிக்கொண்டே "எங்கள் நாடு" இதழினைத் தந்துவிட்டானோ என்ற ஐயத்துடன் மீண்டும் மீண்டும் தினசரியைப் புரட்டிப் பார்த்தோம். என்ன ஆச்சரியம்! உண்மையாகவேதான், "தினசரி", விடுதலை ஏட்டிற்குக் கேட்கப்பட்டுள்ள ஜாமீன் ஜனநாயகத்திற்குத் தரப்பட்டுள்ள மரண தண்டனை என்று எழுதியிருந்தது. நம்மை நாமே நம்பமுடியவில்லை. இது நிஜமா என்ற கேள்விக்குறி நம்மைச் சுற்றிச் சுற்றிச் சுழன்று வரலாயிற்று. இது நிஜமா என்ற கேள்விக்குறியை எழுப்பி நம்மைத் திகைக்கவைத்த அந்தத் "தினசரி" தலையங்கத்தைத்தான், நாம், மேலே, முழுவதுமாக வெளியிட்டிருக்கிறோம்.

ஆனால் நிஜம் நிஜம்தான். "தினசரி" எழுதியிருப்பது உண்மைதான். திராவிடர் கழகத்தைத் தாக்கித் தாக்கி நாத்தழும்பேறிய ஏடு தான் தினசரி என்றபோதிலும் அந்தத் "தினசரி"யால்கூட தாங்கமுடியாத அளவுக்கு, சர்க்கார், எதேச்சாதிகார மனப்போக்கைக்கொண்டவர்களாகிவிட்டார்கள். எனவேதான் "தினசரி" இம்முறை மனம் குமுறிப்போய், "எந்தக் கட்சிப் பத்திரிகையாய் இருந்தாலும் சரி, அதன் இடுப்பை ஒடிக்கும் படியான காரியத்தை இஷ்டப்போல் செய்வது என்பது ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைப்பதாகும்" என்று ஆத்திரத்துடன் எழுதி இருக்கிறது. என்னதான் காங்கிரஸ் பத்திரிகையாக இருந்து கதர் சட்டையை அணிந்து கொண்டிருந்தால்கூட, "தினசரி"யின் இரத்தத்தில் ஓடுவது திராவிட இரத்தந்தானே! அதன் ஆசிரியர் தோழர் சொக்கலிங்கனாரும் திராவிடத் திருமகன்தானே! இன்றைக்கில்லாவிட்டால் பிறிதோர் நாள், அவரும் நாமும் என்று இல்லாவிட்டாலும் அவருடைய பின் சந்ததியாரும் நம்முடைய பின் சந்ததியாருமாவது ஒரே திராவிட முகாமில் கூட்டுத்தோழர்களாக இருந்திரவேண்டியவர்கள்தானே! எனவேதான் போலும் என்னென்ன காரணத்திற்காகவோ, எப்படி எப்படியோ தம் உள்ளத்தின் உள்ளே அடக்கியும் ஒடுக்கியும் நசுக்கியும் நாசமாக்கியும் வைத்திருக்கும் திராவிட இன உணர்ச்சியை சென்ற செவ்வாயன்று வெளியான தினசரி தலையங்கத்தின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார் நம் நண்பர் சொக்கலிங்கனார். தம் கட்சி சர்க்காராயிற்றே அவர்களைக் கண்டிக்கலாமா என்ற தயக்கமோ மயக்கமோ சிறிதுமின்றி ஆட்சியாளர்களின் ஜாமீன் கெடுபிடி "ஞான சூன்யமானது" என்று காரசாரமாக எடுத்துக் கூறியிருக்கும் தோழர் சொக்கலிங்கம் அவர்களின் நெஞ்சு உரத்தை, நேர்மைக் குணத்தை, அஞ்சாமைத் திறத்தை, திராவிடப் பண்பாட்டை நாம் மனமாரப் பாராட்டுகிறோம். கட்சி மாச்சரியத்தின் காரணமாக வெவ்வேறு முகாம்களில் சிதறுண்டு கிடக்கும் திராவிடர்கள் இத்தகு வாய்ப்புகள் நேர்கின்ற காலத்திலேனும் ஒருவருக்கொருவர் இதுபோல் கைகொடுத்து உதவ முன்வந்தால்தான், பார்ப்பனச் சேரியின் கொட்டம் அடங்கும். வாழ்க "தினசரி"யின் நேர்மை!

———

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons